**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, மேட்டூர்**

**முன்னிலை** : N. கோபாலகிருஷ்ணன் B.Sc., B.L., நீதித்துறை நடுவர் எண்,2 (மு.கூ.பொ), மேட்டூர்.

வியாழக்கிழமை 2026ம் வருடம் ஜூன் மாதம் 25–ம் தேதி

குற்றவியல் பல்வகை மனு எண். **528/2026**

ராஜமாணிக்கம் (40)
த/பெ. ரத்தினம், .... **மனுதாரர்/வழக்கு சொத்தின் உரிமையாளர்**

**–எதிர்–**

அரசுக்காக, காவல் ஆய்வாளர்
மேச்சேரி காவல் நிலையம்.
**குற்ற எண் .213/2026,**
**ச/பி. 4(1)(i) r/w 4(1) (A) TNP ACT ......எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்**

இந்த மனுவானது, மனுதாரர் தரப்பில், பாரத குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் பிரிவு 497 –ன் படி, மனுதாரருக்கு சொந்தமான வழக்கு சொத்தை இடைக்கால பொறுப்பில் விடுவிக்கக்கோரி, 09.06.2026–ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் V.வைத்தியலிங்கம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் திருமதி.அனுராதா, அவர்கள் ஆஜராகியும், இந்த நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

1. இந்த மனுவானது மனுதாரர் அவருக்கு சொந்தமான போலீசாரால் கைப்பற்றப்பட்ட TN 30 DY 9173 என்ற பதிவெண் கொண்ட Electric Scooter வாகனத்தை குற்றச்சம்பவத்தில் பயன்படுத்தியதற்காக **ச/பி. 4(1)(i) r/w 4(1) (A) TNP ACT** கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி மனுவில் மனுதாரரின் வாகனமானது தனது அன்றாட வேலைகளுக்கு அவசியம் தேவைப்படுவதாகவும், மேற்படி வாகனத்தை தன்னிடம் ஒப்படைக்கும் பட்சம் வழக்கு சொத்தை வழக்கு சம்பந்தமாக அழைக்கும் பொழுது, இந்நீதிமன்றத்திற்கு கொண்டு வரவும், ஆஜராகவும் தயாராக உள்ளதாகவும் கூறி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிர் மனுதாரர் தரப்பில் மேற்படி வழக்கு சொத்தை நிபந்தனைகளின் பேரில் மனுதாரருக்கு வழங்க தாக்கல் செய்யப்பட்ட பதிலுரையில் கடும் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. மேற்படி, கைப்பற்றப்பட்ட வாகனத்தை தன் வசம் இடைக்காலப் பொறுப்பில் ஒப்படைக்க கேட்டு மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

4. மேற்படி, மனுதாரர் மேற்கண்ட வாகனத்தின் நகல் பதிவு சான்றிதழை ஆய்வு செய்த போது, மேற்படி வாகனமானது மனுதாரர் பெயரில் உள்ளது.

5. மேலும் மேற்படி அரசுடமையாக்கும் நடவடிக்கைக்காக மேற்படி வாகனத்தை காவல் நிலையத்தில் மழையிலும் வெயிலிலும் நிறுத்தி வைத்திருப்பது அந்த வாகனத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் மேற்படி மனுதாரர் கூறியபடி மேற்படி வாகனம் அவருடைய அன்றாட தேவைகளுக்கு அவசியம் தேவைப்படும் என்பதால் அவருடைய வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என இந்த நீதிமன்றம் கருதுகிறது.

6. மேற்படி மனுதாரர் தகுந்த பிணையதாரர்களை ஆஜர் செய்வதாலும், மனுதாரரின் அன்றாட தேவைக்காக வேண்டியும், இந்த நீதிமன்றம் சான்று பொருளை ஒப்படைக்க வேண்டி உத்தரவிட்டால், மனுதாரர் ஒப்படைப்பதாகவும், மனுதாரர் சான்று பொருளை வேறு ஒரு நபருக்கு விற்கமாட்டார் என்று வாக்குறுதி அளித்துள்ளார்.

7. மேலும் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் பிரிவு 14(4)–இன் கீழ் பறிமுதல் நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளதால், வாகனத்தைத் திருப்பிக் கொடுப்பது அந்த நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் என எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபிக்கப்பட்டுள்ளது.

8. இச்சூழலில், W.P. (M.D.) எண். 12587/2020–இல் 25.09.2020 அன்று **'ஆரோக்கிய அந்தோணி சுடர் எதிர் காவல்துறை துணை கண்காணிப்பாளர் மற்றும் மற்றொருவர்' என்ற** வழக்கில் மாண்புமிகு உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை **இந்த நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது**. அத்தீர்ப்பில், தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் 4(1)(aa) மற்றும் 4(1–A) பிரிவுகளின் கீழ் தொடர்புடைய வாகனத்தை, பறிமுதல் நடவடிக்கைகள் முடிவடையும் வரை எதிர்மனுதாரர் கோரும்போதெல்லாம் ஆஜர்படுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் இடைக்காலக் காவலில் ஒப்படைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், 17.06.2019 நாளிட்ட Crl.R.C. (MD) எண். 18/2019–இல் **'மாசிலாமணி எதிர் அரசு'** வழக்கில் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் பறிமுதல் நடவடிக்கைகள் நிலுவையில் இருக்கும் காலத்தில், வாகனத்தைப் பெறத் தகுதியுடைய நபரிடம் அதனைத் திருப்பி அளிக்க வேண்டும் என்பது நன்கு நிலைநிறுத்தப்பட்ட ஒன்றாகும். பறிமுதல் நடவடிக்கை என்பது ஒரு சுதந்திரமான தனி நடவடிக்கையாக இருப்பதால், வாகனத்தைத் திருப்பிக் கொடுப்பது பறிமுதல் நடவடிக்கையில் எந்தவிதப் பாதிப்பையும் ஏற்படுத்தாது எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. ஆகவே மேற்படி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் வழிகாட்டுதல்களின் படி அரசு தரப்பின் ஆட்சேபணை நிராகரிக்கப்படுகிறது.

ஆகவே, மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில், கைப்பற்றப்பட்ட வழக்கு சான்று பொருளான TN 30 DY 9173 என்ற பதிவெண் கொண்ட Electric Scooty இருசக்கர வாகனத்தை மனுதாரர் வசம் கீழ்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில், இடைக்காலமாக ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது.

i. **இந்த நீதிமன்றம் திருப்தி அடையும் வகையில், மனுதாரர் இரு பிணையதாரர்களை ஆஜர் செய்ய வேண்டும். மேலும் மனுதாரரும், ஒவ்வொரு பிணையதாரர்களும் தலா ரூ.30,000/–க்கான பிணையப்பத்திரம்**

**இந்த நீதிமன்றம் முன்பாக எழுதிக் கொடுக்க வேண்டும்.**

ii. மனுதாரரும், பிணையதாரரும் சமீபத்தில் எடுக்கப்பட்ட 2 வண்ண புகைப்படங்கள் இந்நீதிமன்றத்தில் ஒப்படைத்து, பிணைய பத்திரத்தில் தங்களது இடதுகை பெருவிரல் ரேகையை பதிவு செய்யவேண்டும்.

iii. மேலும் பிணையதாரரும், மனுதாரரும், தங்களது அடையாளத்தை நிரூபிக்கும் பொருட்டு, அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏதேனும் அடையாள அட்டையை தாக்கல் செய்யவேண்டும்.

iv. மேலும், மேற்படி வழக்கு சொத்தை வழக்கு முடியும் வரை மனுதாரர் யாருக்கும் விற்பனை செய்யக்கூடாது. நீதிமன்ற உத்தரவின் போது வழக்கு சொத்தை திரும்ப ஒப்படைக்க வேண்டும்.

v. வழக்கு சொத்தின் புகைப்படத்தை எடுத்து பாரத சாட்சிய சட்டம் 2023, பிரிவு 63ன் கீழ் சான்று செய்து அவற்றை CDயுடன் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டும்.

vi. மேலும் பாரத குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் 2023 , விதி 280–ன் படி **நீதித்துறை படிவம் எண் 82ல்** பஞ்சனாமா எழுதி இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டியது.

vii. **வாகனத்தின் அசல் பதிவு சான்றிதழை இந்த நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும். மறு உத்தரவு வரும் வரை அந்த அசல்பதிவு சான்றிதழ் இந்த நீதிமன்றத்தின் பாதுகாப்பில் இருக்க வேண்டும்.**

viii. **மேற்படி நிபந்தனைகள் அனைத்தையும், மனுதாரர் நிறைவேற்ற வேண்டும் எனவும், அந்த நிபந்தனைகளுக்கு மனுதாரர் கட்டுப்பட்டவர் ஆவார் எனவும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகின்றது.**

இந்த உத்தரவு, என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு, திறந்த நீதிமன்றத்தில் அவையறிய இன்று **25.06.2026**–ம் தேதி பகரப்பட்டு, என் கையொப்பமும், நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

NAGARAJAN
GOPALAKRISHNAN

Digitally signed by
NAGARAJAN
GOPALAKRISHNAN
Date: 2026.06.25 19:34:58
+0530

**நீதித்துறை நடுவர் எண்.2(மு.கூ.பொ), மேட்டூர்.**